# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),**

**மனு எண். 1348/ஊராட்சி/2018**

**நாள்: 23/10/2018**

பெறுநர்
R. இராமமூர்த்தி,
28, அருந்ததியர் தெரு,
பாலக்கோடு போஸ்ட் & தாலுக்கா,
தர்மபுரி மாவட்டம் – 636 808. – மனுதாரர்

ஊராட்சி ஒன்றிய ஆணையர்,
பாலக்கோடு,
தர்மபுரி. – எதிர் மனுதாரர்

## ஆணை

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம் பாலக்கோட்டில் வசிக்கும் திரு. R. இராமமூர்த்தி, அவருடைய 1.10.2018 நாளிட்ட புகார் மனுவில் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் 80 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிவதாகவும், துப்புரவு பணியாளருக்கு ஊதிய நிர்ணயம் செய்ததில் முறைகேடு நடந்துள்ளதாகவும் தெரிவித்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வழிவகையில்லை. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தர்மபுரி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்து, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து, தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

23/10/2018
செயலாளர்.

23.x.18

23/10/18

பெறுநர்
R. இராமமூர்த்தி,
28, அருந்ததியர் தெரு,
பாலக்கோடு போஸ்ட் & தாலுக்கா,
தர்மபுரி மாவட்டம் – 636 808.

நகல்
1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   தர்மபுரி மாவட்டம்,
   தர்மபுரி. (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
3. செயலர் அவர்களின் நேர்முக எழுத்தர்
4. ஊராட்சிகளின் உதவி பிரிவு அலுவலர்